சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**MCOP.No. 36 / 2022**

ம.சா.1. நடராஜ் 19.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த விபத்து 2017ம் வருடம் நடந்தது. தேவத்தூர் கள்ளிமந்தையம் ரோட்டில் கப்பல்பட்டி முன்னால் தலைவர் செல்லமுத்து தோட்டம் அருகே விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது 11.00 மணி இருக்கும். அந்த ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி டி.வி.எஸ்.50 வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். நான் சென்ற அந்த வாகனம் என்னுடையது தான். அந்த வாகனத்திற்கு பதிவு சான்று, காப்பீடு சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எதுவும் இல்லை. எனக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற போதுஎனக்கு பின்னால் வந்த **TN.57.AB.7387** என்ற இன்டிகா கார் அதை ஓட்டி வந்த ஓட்டுநர் கவனமாகவும் சாலைவிதிகளை பின்பற்றி மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் நான்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டதெரியாமல் ஓட்டி வந்து தீடீரென வாகனத்தை நிறுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் இந்த விபத்திற்கு நான் தான் முழுக்காரணம் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது. எனக்கு சொந்தமாக நிலங்கள் இருப்பதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த விபத்து சம்மந்தமாக விபத்து பதிவேடு மற்றும் வரைபடம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகியவைகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. போட்டுள்ளோம். அதுபோன்று எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு தலையிலும் மற்றும் வலது கையிலும் காயம் ஏற்பட்டது. நான் இந்த விபத்து சம்மந்தமாக பழனி வேல்மருத்துவமனையில் ஒருவாரமாக உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்தார்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் வரிசை எண்.23-ல் ரூ.605க்கு பதிலாக ரூ.805 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதேபோல் வரிசை எண்.26 மற்றும் 28 ஆகிய மருத்துவ பில்கள் ஒரே செலவுத்தொகைக்கான இரண்டு பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ மொத்த தொகையில் ரூ.26,789ல் ரூ.2,400

கழிக்க வேண்டும் என்றால் சரியல்ல. வரிசை எண்.31-ல் எத்தனை நாட்கள் தங்கி மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல. வரிசை 31-க்கான மருத்துவ பில்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் நான் 2-ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் மோட்டார் வாகன சட்டத்தின் படி தலைக்கவசம் அணியாமலும் நான் ஓட்டிச் சென்ற வாகனம் காப்பீடு செய்யப்படாததாலும் பதிவு செய்யாததாலும் பொதுச்சாலையில் நான் வாகனத்தை இயக்கி செல்ல அருகதை இல்லை என்றும் அதனால் நான் மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரர் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.20 10:15:07 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்